**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL ASSISTANT SESSIONS JUDGE, KANCHEEPURAM**

| | |
|---|---|
| Sessions Case No | SC.No. 19/2023 |
| Primary Register Case No; | |
| Deposition of Witness for | Prosecution PW - 5 |
| | Defence |
| | Court |
| Name | அருள் |
| Father's Name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Regligion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 27th day of March 2026.

Signature of Witness

Name of the Interpreter: Tmt. Eswari, Head Clerk

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 27th day of March 2026.

Signature of Interpreter

**முதல் விசாரணை**

நான் ஸ்ரீபெரும்புதூர் கச்சிப்பட்டு கிராமத்தில் வசித்து வருகிறேன். அ.சா.4 பக்கிரிசைாமியை எனக்கு தெரியும். அவர் என்னுடைய சித்தப்பா ஆவார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எந்த விவரமும் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். அது அ.சா.ஆ.2 ஆகும். அதுபோல் முதல் எதிரியில் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். அது அ.சா.ஆ.3 ஆகும். அதுபோல் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்தும் என்னுடையது தான். அது அ.சா.ஆ.4 ஆகும். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

கடந்த 02.05.2012 அன்று பகல் 1.45 மணியளவில் காவல் ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும் அதில் நானும் பக்கிரிசாமி என்பவரும் சாட்சி கையெழுத்து செய்ததாகவும் இவ்வழக்கின் முதல் எதிரி முத்துவை ஆய்வாளர் கைது செய்து அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை என் முன்னிலையிலும் பக்கிரிசாமி முன்னிலையிலும் பதிவு செய்து அதன் அடிப்படையில் முதல் எதிரி ஆஜர்படுத்திய மூன்று இரும்பு ராடுகள் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றியதாகவும் அதில் நானும் பக்கிரிசாமியும் சாட்சி கையெழுத்து செய்ததாகவும் இது குறித்து ஆய்வாளரின் விசாரணையின் போது சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை

காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் அவர்களுக்கு அதரவாக பொய் சாட்சியம் அளிகக்கிறேன் என்றால் சரியல்ல.

(எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது).

Sd/– K.S.அருண் சபாபதி,
முதன்மை சார்பு நீதிபதி,
காஞ்சிபுரம்